என் என். டி. எம். எஸ். (சி) 83 விலை 35 காசு

எழில் வேந்தன்

# எம்.ஜி.ஆர்.

ஆசிரியர்: ஜெயவேந்தன் ★ இணையாசிரியர்: எம். ரெங்கநாதன் பி. எஸ்ஸி

வில் 6 ✲ 5—7—76 மாதமிருமுறை ★ கணை 8

## புரட்சித் தலைவரின் வண்ணப் படம்

# அண்ணா நீ என் தெய்வம்

## ஜெயார் மூவீஸ் படைப்பு

மக்கள் திலகம் நடித்து ஜெயார் மூவிஸ் சார்பில் பி. கே. சங்கரன்—ஆறுமுகம் சகோதரர்கள் தயாரிக்கும் வண்ணப்படத்துக்கு "அண்ணா நீ என் தெய்வம்" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. புதுமை இயக்குனர் ஸ்ரீதர் கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார். இப்படத்தின் பிடிப்பு ஒரு வாரம் இடைவிடாமல் நடந்தது.

வெளியூரில் லாரி டிரைவராக பணியாற்றும் ராஜுவுக்கு திடீரென்று அவசர தந்தி வருகிறது. தன் தாயிடமிருந்து வந்த தந்தியைக் கண்டவுடன் ஊருக்குச் சென்றான் ராஜு.

உடனே தன் தாயிடம் வந்து "என்னம்மா அவசரமா தந்தி அனுப்பியிருக்கிறே?" என்று பதட்டத்துடன் கேட்டான் ராஜு.

ராஜுவின் தாயார் மிக சோகமாக 'உன் தங்கை சீதா சாப்பிடாமல் வாந்தி எடுக்கிறாள்' என்றாள்.

'சீதா ஏன் வாந்தி எடுக்கிறே? என்று அண்ணன் ராஜு கேட்டான்.

சீதா அண்ணன் முகத்தை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் அழுதாள்.

"என்னம்மா நடந்தது. குழப்பாமல் சொல்லுங்கள்" என்று தாயாரை வற்புறுத்துகிறான் ராஜு.

என் வாயால் எப்படி சொல்வேனப்பா. உன் தங்கை நம் குடும்ப மானத்தையே பறக்கவிட்டுட்டாப்பா. அவள் கெட்டுப் போயிட்டாப்பா"

இதைக் கேட்டவுடன் ராஜு அடித்தான். கோபம் கொண்ட நாகம்போல் சீறினான். 'உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவன் யார்' என்று தங்கையைக் கேட்டான். தங்கை வாய் திறந்து சொன்னபாடில்லை. ராஜு கோபத்தில் தங்கையை அடித்து தங்கையைக் கெடுத்தவனைக் கண்டுபிடிக்க சென்றான்.

தங்கையைக் கெடுத்தவனைக் கண்டுபிடித்த சந்தோஷத்தில் வீட்டில் நுழைந்த ராஜுவுக்கு பேரிடி போன்ற செய்தி கிடைத்தது. தங்கை கடிதம் எழுதி விட்டு வீட்டைவிட்டு ஓடிவிட்டாள். இதை அறிந்தவுடன் ராஜு ஓடினான். தங்கையைக் கண்டுபிடித்து வீட்டுக்கு அழைத்து வந்தான்.

அம்மா சீதாவைக் கூட்டிக்கிட்டு வந்திருக்கேன் பாரும்மா.

அவள்தான் நம்ம குடும்ப மானத்தையே அழிச்சுட்டாளே.

அழுவதாலமட்டும் அவள் செய்த தவறு சரியாயிடுமா சீதாவுக்கு ஒரு கல்யாணம் ஆயிடுச்சுன்னு வைச்சுககுங்க.

அவளுக்குத்தான் இன்னும் கல்யாணம் ஆகலியேப்பா.

அம்மா. கணவன் மனைவி ஒத்துப்போய் ஒரு இரவு தங்கிட்டாங்க. அவங்களுக்குள்ளே கல்யாணம் ஆன மாதிரிதானே. புருஷன் கோவிச்சுக்கிட்டுப் போயிட்டான்னு நினைச்சுக்குங்க.

இக்காட்சி ஜெயார் மூவிஸ் "அண்ணா நீ என் தெய்வம்" படத்திற்காக சத்யா ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.

ஐந்து நாட்கள் இடைவிடாமல் படப்பிடிப்பு நடந்தது.

ராஜுவாக எம். ஜி. ஆரும், தாயாராக பண்டரிபாயும், தங்கை சீதாவாக புதுமுகம் சங்கீதாவும் நடித்தார்கள்.

பாலகிருஷ்ணன் ஒளிப்பதிவை கவனிக்கிறார்.

பி. கே. வி. சங்கரன்—ஆறுமுகம் சகோதரர்கள் தயாரித்து வரும் இப்படத்தின் கதை வசனம் டைரக்ஷன் ஸ்ரீதர் கவனிக்கிறார்.

### புதுமையான தயாரிப்பு

இந்தியா முழுவதும் உள்ள திரைப்பட வல்லுனர்களிடமிருந்து கட்டுரைகள் பெற்று அவற்றை மலராக தொகுத்து அதன்மூலம் கிடைக்கும் பணத்தைப் படத்தயாரிப்புக்கு முதலீடாகப் போட உள்ளார்கள்.

'ஜ்வாலா' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு இளைஞர் குழு ஒன்று புதுமையான வகையில் படத் தயாரிப்பில் இறங்கியிருக்கிறது.

ஜெயபாரதி எழுதிய 'இரண்டு பேர் வானத்தைப் பார்க்கிறார்கள்' என்ற படத்தை தயாரிக்க தீர்மானித்துள்ள இக்குழுவினர் சினிமா உலகத்தவரிடமிருந்து விளம்பரங்களைத் தேடுகிறார்கள்.

## தமிழ்ப் படவுலகின் மானம் காத்தவர்!

சென்னை நகரில் "ஷோலே" முப்பது வாரங்களைக் கடந்து வசூலில் புதிய சாதனையை ஏற்படுத்தி வருகிறது. "இத்தாகாசல்", "சோட்டிசி பாத்" ஆகிய இந்திப் படங்கள் வெள்ளி விழா ஓடியிருக்கின்றன. "பருத், கபீகபீ" ஆகிய படங்கள் நூறுநாளைக் கடந்தன. "ராசலீலா" மலையாளப் படம் நூறுவது நாளை எட்டிப் பிடிக்கிறது.

ஆனால் தமிழ்ப் படங்களின் நிலை? இதுவரை "சந்ததி" படத்தைச் சேர்த்து 37 தமிழ்ப்படங்கள் வெளியாகியிருக்கின்றன. மக்கள் திலகம் நடித்த "நீதிக்குத் தலைவணங்கு' படம் மட்டும் சென்னையில் தேவிகலா, மகாராணி, திருச்சி, மதுரை ஆகிய இடங்களில் நூறு நாட்கள் ஓடி வசூல் சாதனை ஏற்படுத்தியிருக்கிறது. வெளிவந்த தமிழ்ப்படங்களில் நூறுநாள் ஓடிய முதல் தமிழ்ப்படம் "நீதிக்குத் தலைவணங்கு" தமிழ்த் திரையுலகின் மானத்தைக் காப்பாற்றியவரும் இன்னும் எதிர்காலத்தில் காப்பாற்றப்போகிறவரும் மக்கள் திலகம் ஒருவர்தான்.

## படவுலக எதிரிகள்

சினிமாவில் பி. ஆர். ஓ. (பொதுஜனத் தொடர்பு) என்ற பெயரில் இடைத்தரகுப் பேர்வழிகள் செய்யும் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்து இப்போது எல்லைமீறிப் போய்விட்டது. நடிகர் நடிகைகள் தயாரிப்பாளர்கள் ஆகியோருக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இடையே பிளவு உண்டாக்கி நடுவில் லாபம் தேடப் பார்க்கும் இந்த பொதுஜன விரோதிகளை பகிரங்கமாக எச்சரிக்கிறோம்.

சினிமா நடிகை பத்திரிகையாளர்களைச் சந்திக்க விரும்புகிறார் என்று வைத்துக்கொள்வோம். பத்திரிகையாளர்களுக்கு அழைப்பு அனுப்பி நடிகையிடம் "சில்லறைக் காசை"ப் பெற்றுக்கொள்ளும் ஏஜண்டுகள்தான் பி. ஆர்.ஓ. ஆனால் இப்போது இந்த தரகுப் பேர்வழிகள் பத்திரிகையாளர் காட்சிக்கும், பத்திரிகையாளர் சந்திப்புக்கும் "ஒரிஜினல்" பத்திரிகையாளர்களை அழைப்பதே இல்லை.

வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள "இளம்பெண்கள்", தங்கள் குடும்பத்தினர், கடன் கொடுத்தவர்கள் ஆகியோரிடம் இந்த அழைப்புக்களைக் கொடுத்துவிடுகிறார்கள். மேற்கண்டவர்களுக்கே அழைப்பு சரியாகி விடுவதால் பத்திரிகையாளர்களுக்கு அழைப்பு அனுப்புவதே இல்லை. அது மட்டுமா?

தினசரிப் பத்திரிகைகளில் வேலை பார்க்கும் சில எச்சில் பேர்வழிகளை அழைத்து "தண்ணி" விருந்து கொடுக்கிறார்கள். அக்கிரமத்தின் எல்லைக்கே போய் பேயாட்டமிடுகிறார்கள். நடிகர் நடிகைகளுக்கு ஒரு வேண்டுகோள்.

தயவுசெய்து கடைகளுக்குச் சென்று விசாரித்துவிற்பனைக்கு வரும் பத்திரிகைகளுக்கு மட்டுமே அழைப்பு அனுப்புங்கள். பி. ஆர்.ஓ. என்ற சில்லுண்டிப் பேர்வழிகளை நம்பாதீர்கள்.

இனிமேல் பத்திரிகையாளர் என்ற பெயரில் "தண்ணி" விருந்தளித்தால் போலீசுக்குத் தகவல் கொடுப்போம். இது ஓர் எச்சரிக்கை.

## மைசூரில் இரு படங்கள் படப்பிடிப்பு மும்முரம்!

மக்கள் திலகம் நடிக்கும் "நவரத்னம், மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்" ஆகிய படங்கள் படமாக்கப்படுகின்றன. ஜூலை மாதம் 3-ந் தேதியிலிருந்து "மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்" படப்பிடிப்பு தொடங்கியது. மக்கள் திலகம், பி. எஸ். வீரப்பா, சகஸ்ரநாமம், லதா, பத்மபிரியா ஆகியோர் படப்பிடிப்பில் கலந்துகொண்டனர்.

புரட்சிப் புலவரை சோழ மன்னர் கைது செய்துகொண்டு வருமாறு உத்தரவிட்ட நேரத்தில் "யார் புரட்சிப் புலவர்" என்று கண்டுபிடிக்கும் காட்சி படமாக்கப்பட்டது.

ப. நீலகண்டன் வசனம் எழுதும் இப்படத்தை மக்கள் திலகம் டைரக்டு செய்கிறார்.

ஏ. பி. நாகராஜன் டைரக்டு செய்து சி. என். வி. மூவிஸ் சார்பில் சி. என். வெங்கடசாமி தயாரிக்கும் "நவரத்னம்" படத்தின் அடுத்த கட்ட படப்பிடிப்பு மைசூரில் நடக்கவிருக்கிறது.



கட்சி செயற்குழுக் கூட்டத்துக்கு வந்த எஸ். எஸ். ராஜேந்திரனைக் கொல்ல முயற்சித்த கருணாநிதிக்கும்பலை மக்கள் திலகம் சுட்டெரித்துவிடுவதைப்போல பார்க்கும் இத்தோற்றம் ஏ. பி. நாகராஜன் கதை வசனம் எழுதி இயக்கும் "நவரத்னம்" படத்தில் இடம்பெறுகிறது.

## பூசாரி பத்திரிகையாளர்கள்

"காவல்காரன்" படத்தில் குழந்தை நட்சத்திரமாக சிறப்பாக நடித்த பேபி ராஜி சமீபத்தில் பெரியவராகி "ஆண்பிள்ளை சிங்கம்" படத்தில் நடித்தார்.

இப்போது ஜெமினி கணேசன் டைரக்ஷனில் உதயம் புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் "இதயமலர்" படத்தில் கமலஹாசன் ஜோடியாக ராஜி நடித்து வருகிறார். இதை முன்னிட்டு ராஜி பத்திரிகையாளர்களை சந்தித்தார்.

இவ்விழாவுக்கு தலைமைதாங்கி ஜெமினி கணேசன் பேசியதாவது:

"பூக்கடைக்குக்கூட விளம்பரம் தேவைப்படும் காலமிது. எனவே எல்லா நடிகர்களுக்கும் பத்திரிகை விளம்பரம் தேவை. தெய்வத்தைக்கூட "இது காளி" "இது பரமசிவன்", "இது முருகன்" என்று அடையாளம் காட்ட பூசாரி தேவைப்படுகிறது. அதனால்தானோ என்னவோ தெய்வம் வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க வேண்டும் என்று பரவலாகக் கூறிக்கொள்கிறார்கள்.

தெய்வங்களை பூசாரி வெளிச்சம் போட்டுக் காட்டுவதைப்போல நடிகர்களையும் பொதுமக்களுக்கு பத்திரிகையாளர்கள் அறிமுகப்படுத்துகிறார்கள்.

எனவே பத்திரிகை விளம்பரமில்லாத எந்த கலைஞனும் முன்னேறியதில்லை. அப்படிப்பட்ட பத்திரிகையாளர்கள் கலைஞர்களைப்பற்றி விமர்சனம் செய்யும்போது தாங்கிக்கொள்ளும் சக்தி கலைஞர்களுக்கு வேண்டும். எப்போதுமே புகழ்ந்துகொண்டிருந்தாலும் அது வாசகர்களுக்கும் சுவையாயிராது. நடிகருக்கும் நல்லதல்ல.



என்னையே உதாரணமாக சொல்லவேண்டுமானால் சமீபத்தில் என் மகள் (ரேகா) வீட்டில் 25 லட்சம் ரூபாய் பிடிபட்டதாக செய்தி வெளிவந்தது. நான் வருத்தப்பட்டேன். ஆனால் "என்னய்யா உன்னை பிச்சைக்காரன் என்று போட்டுவிட்டார்கள். பணம் என்பது மகாலட்சுமி. 25 லட்சம் எடுத்தார்கள் என்றால் நீ பெரிய பணக்காரன் என்றுதானே அர்த்தம்?' என்று என்னிடம் பல நண்பர்கள் கூறினார்கள். நானும் யோசித்ததில் அது சரியெனப்பட்டது.

எனவே நடிகர் நடிகைகளை பத்திரிகையாளர் குறை சொல்லும்போதோ விமர்சிக்கும் போதோ அதை ஏற்றுக் கொண்டு நாம் (நடிகர்கள்) திருந்த வேண்டும். பத்திரிகையாளர் அப்படி எழுதுவதை "பத்திரிகை தர்மம்" என்றுதான் நான் குறிப்பிடுவேன்.

எதற்குமே கடவுளின் அருள் வேண்டும். "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்பதைப்போல அந்த விஷயத்தில் (சாவித்ரி) எனக்கு சரியில்லைதான். அனுபவப்பட்டு விட்டேன்".

இவ்வாறு ஜெமினி கணேசன் கூறினார்.

## ஊருக்கு உழைப்பவன் சுதந்திரதின வெளியீடு

வீனஸ் பிக்சர்சின் பிரம்மாண்டத் தயாரிப்பான "ஊருக்கு உழைப்பவன்" சுதந்திர (ஆகஸ்டு 15) தினத்தன்று வெளிவருகிறது. மக்கள் திலகம் நடித்து அடுத்து வெளியாகும் படம் இதுதான்.

"ஹம் சகல்" என்ற இந்திப் படத்தை தழுவிய இந்தப் படத்தில் மக்கள் திலகம் இரட்டை வேடமேற்றுள்ளார். மக்கள் திலகம் இரட்டை வேடமிட்டு நடிக்கும் பத்தாவது படமாகும் இது.

"தலைவன்" படத்துக்குப் பின் நீண்டகால இடைவெளியில் வாணிஸ்ரீ இப்படத்தில் மக்கள் திலகத்துடன் நடிக்கிறார். "வெண்ணிற ஆடை" நிர்மலா, கே. கண்ணன், தேங்காய் சீனிவாசன், பி. எஸ். வீரப்பா, குமாரி பத்மினி, ஐசரி வேலன், சிவசூரியன் ஆகியோரும் நடித்துள்ளனர்.

பம்பாயில் படமாக்கப்பட்ட ஹெலிகாப்டர் சண்டை இப்படத்தின் புதுமைமிக்க அம்சமாகும். ஆர். கே. சண்முகம் கதை வசனம் எழுத, புலமைப்பித்தன், வாலி, நா. காமராசன், முத்துலிங்கம், ராண்டார்கை ஆகியோரின் பாடல்களுக்கு எம். எஸ். விஸ்வநாதன் இசையமைக்க, பாலகிருஷ்ணன் ஒளிப்பதிவு செய்ய, "ரிக்ஷாக்காரன்" புகழ் எம். கிருஷ்ணன் டைரக்ட் செய்கிறார்.

பம்பாய், மைசூர், பெங்களூர் ஆகிய இடங்களில் படமாக்கப்பட்ட வெளிப்புறக் காட்சிகள் நிறைந்த பொழுதுபோக்கு சித்திரமான "ஊருக்கு உழைப்பவன்" படப்பிடிப்பு முடிந்துவிட்டது. இம்மாத (ஜூலை) இறுதியில் தணிக்கையாகிறது.

எம்.ஜி.ஆர். ரசிகர்களின் எண்ணங்களை எதிரொலிக்கும் ஏடு

# பத்திரிகை விளம்பரம்

**அன்புள்ள பாண்டியா!**

நம் பட முதலாளிகளில் பெரும்பாலோர் வடநாட்டு ஆங்கில படத் தொழிலை அப்படியே காப்பி அடிக்கிறவர்கள். அப்படிப் பட்டவர்கள் இந்த விளம்பரக் கலையை மட்டும் ஏன் அவர்களைப் பார்த்து காப்பியடிப்பதில்லை என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது. உதாரணமாக இந்தயில் முப்பது லட்சம் ரூபாய் செலவில் ஒரு படம் தயாரிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். படத்தயாரிப்புக்கான செலவில் பாதித் தொகைக்குமேல் மேற்படி படத்தை விளம்பரப்படுத்த அவர்கள் செலவிடுகிறார்கள். தாங்கள் செலவு செய்த பணத்தைப் பன்மடங்கு லாபத்துடன் திரும்பப்பெற இந்திப் பட முதலாளிகள்—படம் எவ்வளவு தரமானதானாலும் அந்த விளம்பர பலத்தையே தான் பெரிதும் நம்பியிருக்கிறார்கள். அவர்களது சிறந்த விளம்பர முறையினால் அது சாத்தியமும் ஆகிறது. (ஸ்கிரீன் பத்திரிகையில் தொடங்கி ஆன்லுக்கர் முடிய அத்தனை ஆங்கில இந்தி சினிமாப் பத்திரிகைகளில் இந்திப்பட விளம்பரங்கள் பக்கம் பக்கமாய் வருவதை கண்டிருக்கலாம்.)

ஆனால் இங்கோ?...பத்து லட்சம் ரூபாய் செலவில் படம் தயாரித்துவிட்டு அதற்கு விளம்பரத்திற்கென்று பத்தாயிரம் ரூபாய் கூட ஒதுக்கத் தயங்குகிறார்கள். சிலர் விளம்பரமா? வேண்டவே வேண்டாம் என்று மறுத்துவிடுகிறார்கள்.




நம் படமுதலாளிகளிலும் ஆர். எம். வீரப்பன், உதயம்புரொடக்ஷன்சார்போன்று விளம்பரத்திற்கு என்று ஏராளமாகச் செலவிடுகிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். சமீபத்தில் "மேயர் மீனாட்சி" படத்துக்கு எல்லா பத்திரிகைகளுக்கும் விளம்பரம் தரப்பட்டது. அதைத் தொடர்ந்து படமும் பொதுமக்களின் ஏகோபித்த வரவேற்பினை குவித்தது பாராட்டுதற்குரியதே. இந்த சந்தர்ப்பத்தில் முக்கிய தகவல் ஒன்றையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதாவது தமிழ்ப்பட வரலாற்றில் பிரமிக்கும்படியான விளம்பரத்தை முதல் முதல் செய்தவர் ஜெமினி அதிபர் வாசன்.

அவர் தயாரித்த "சந்திரலேகா" படத்துக்குத்தான் முதல் முதலாக முழுப்பக்க விளம்பரம் தினசரிப்பத்திரிகைகளில் வெளிவந்தது. அன்றுமுதல் இன்றுவரை ஜெமினியின் அத்தனை படங்களுக்கும் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் தந்து வருகிறார்கள். தமிழ்ப்பட அதிபர்கள் மீது ஒட்டுமொத்தமாக நான் குற்றம் சாட்டவில்லை என்பதற்காகவே மேற்கண்ட உதாரணங்களைக் குறிப்பிட்டேன்.

அதேநேரத்தில் விளம்பரத்தின் பலன் சில படமுதலாளிகளுக்கு தெரியவில்லை என்பதற்கும் சில சான்றுகளைக் கூற விரும்புகிறேன். தமிழ்ப்படங்களைப்பற்றி நாலு வார்த்தையோ மூணே முக்கால் வரியோகூட எழுதத் தயங்கும் தினசரிகளுக்கு பக்கம் பக்கமாக விளம்பரம் கொடுக்கிறார்கள்.

ஆனால் சினிமா ரசிகர்கள் விரும்பிப் படிக்கும் "எழில்வேந்தன் எம். ஜி. ஆர்." போன்ற பத்திரிகைகளுக்கு மூக்கால்அழுதுகொண்டே விளம்பரம் கொடுக்கிறார்கள்.

படம் தயாராகி, திரையிடப்பட்டு, வெற்றியோ அல்லது தோல்வியோஅடைந்து டப்பாவுக்குள் அடையும்வரை ஒவ்வொரு நிலையிலும் படசம்பந்தமான நிகழ்ச்சி செய்திகளைப் பிரசுரித்து படங்களை வெளியிட்டு உதவி புரிவது சினிமா பத்திரிகைகள்தான். இதற்காக அந்த பத்திரிகைகளுக்கு ஆகும் செலவு, பட முதலாளி கொடுக்கும் ஒரு பக்கம் விளம்பரத் தொகையைவிட அதிகம்.

விளம்பரம் என்று நான் குறிப்பிடுவது பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பதை மட்டும் அல்ல படம் தயாரிப்பிலிருக்கும் போதே அவ்வப்பொழுது பத்திரிகைகளுக்கு செய்திகள், படங்கள் அனுப்புவது இப்படியான முறைகளைக் கையாள்வது கிடையாது. அப்படியெல்லாம் செய்தால்தானே ரசிகர்களிடையே அந்தப் படம் எப்போது வெளிவரும் என்ற ஆவலைத் தூண்டமுடியும். நம்பட முதலாளிகளில் பெரும்பாலோர் இதை உணரவில்லை.

ஒரு வேடிக்கையான சம்பவத்தை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன் சமீபத்தில் ஒரு படத் தயாரிப்பாளரிடம் பேசிக் கொண்டிருந்தேன். செய்திகளுடன் பிரசுரிக்க (இலவசமாகத்தான்) படத்தின் ஸ்டில்கள் ஏதாவது இருந்தால் கொடுக்கும்படி கேட்டேன். "ஸ்டில்களா?" என்று ஆகாயத்தைப் பார்த்தார். "ஒரு ஸ்டில் பிரிண்ட் போட ஏழு ரூபாய் ஆகிறது சார்" என்று பெருமூச்சுவிட்டார். அவரை நினைத்து என்னால் பச்சாத்தாபப்படாமல் இருக்க முடியவில்லை. ஏழு ரூபாய் செலவு செய்து ஸ்டில் ஒன்று கொடுக்க அப்படிப் பெருமூச்சுவிட்டார். ஆனால் அதை பிளாக் செய்து அச்சடிக்க எங்களுக்கு ஆகும் செலவு? (35 ரூபாய்க்கு மேல்) அது அவர் சிந்தனையில் பட்டதாகவே தெரியவில்லை.

"எவ்வளவுக்கெவ்வளவு குறைந்த செலவில் படம் தயாரித்து முடிக்கிறோமா அவ்வளவுக்கு நல்லது" என்ற எண்ணம் இப்பொழுது பலரது மனதில் புகுந்துவிட்டது. நல்ல எண்ணம்தான். ஆனால் விளம்பர விஷயத்தில் கஞ்சத்தனம் காட்டுவது புத்திசாலித்தனம் இல்லையே!

விளம்பரம் என்று வரும்போது நம் பட முதலாளிகளில் சிலருக்கு அதன் அவசியம் மகிமை தெரியாமல் இருக்கிறது. ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்து யானை வாங்கிய ஒருவன் அங்குசம் ஒன்று வாங்க யோசித்த கதைதான் அவர்கள் விஷயம். பூக்கடைக்குக்கூட விளம்பரம் தேவைப்படும் இந்தக் காலத்தில் அதன் மகிமையை உணராதவர்களை என்னவென்று சொல்வது!

அன்புள்ள,

**மாயாண்டி.**

ஸ்ரீதர் வசனம் எழுதி டைரக்ட் செய்யும் படத்தில்

# புதுமைப் பொறிபறக்கும் எம்.ஜி.ஆர். வாள் சண்டை

குமரனுக்கும் கமலிக்கும் அன்று முதலிரவு. மீனவ சமுதாயத்தின் பிரதிநிதி குமரனுக்கும் பணக்கார குடும்பத்துப் பெண்ணான கமலிக்கும் ஏற்பட்ட காதல், திருமணமாகி நடைபெறுகிற முதலிரவு அது.

குமரன் ஏழைதானே என்ற எண்ணத்தில் கமலியின் தந்தை மதிப்புக்கொடுக்க மறுக்கிறார். கமலியின் அக்காள் தங்கையின் முதலிரவு ஏற்பாடுகளை கவனிக்கிறார். படுக்கை அலங்காரங்களைச் செய்து வைக்கிறார்.

இதைப் பார்த்த கமலியின் தந்தைக்கு ஏகப்பட்ட ஆத்திரம் வருகிறது. ஒரு சாதாரணமானவனுக்கு இவ்வளவு பெரிய அலங்காரமா என்று கொதிக்கிறார். அதோடு நின்றுவிடாமல் வேலைக்காரர்களைக் கூப்பிட்டு அலங்கரிக்கப்பட்ட கட்டிலை அப்புறப் படுத்தச் சொல்கிறார்.

இதை குமரன் பார்த்துக் கொண்டே வருகிறார். தந்தையின் போக்கை எண்ணி குமுறும் கமலியைச் சமாதானப்படுத்துகிறார்.

"ஆடம்பரத்தைப் பார்த்து மயங்குகிறவன் நான் அல்ல. மிகச் சாதாரண வாழ்க்கையிலும் நான் மகிழ்ச்சி காணுவேன்" என்கிறார் குமரன். தொடர்ந்து குமரன்...கட்டில் இருந்தால்தான் சந்தோஷம் பெற முடியுமா? எளிமையாக வாழ்ந்தும் ஆனந்தம் அடைய முடியும் என்கிறார்.

இப்படியொரு காட்சி முத்து எண்டர்பிரைசஸ் படத்திற்காக சத்யாவில் படமாக்கப்பட்டது.

குமரனை மக்கள் திலகம் நடித்தார். கமலியாக லதா நடித்தார். கமலியின் அக்காளாக வெண்ணிற ஆடை நிர்மலாவும், தந்தையாக வி. கே. ராமசாமியும் நடித்தார்கள்.

மக்கள் திலகம் பங்கேற்கும் பயங்கரமான வாள் சண்டை காட்சி சத்யா ஸ்டுடியோவில் படமாக்கப்படும்.

இந்தக் கத்திச்சண்டை காட்சியில் மக்கள் திலகத்துடன் நம்பியார் பங்கேற்பார்.

இந்த சண்டைக்காட்சி படத்தின் முக்கிய கட்டமாகவும், புதுமை அம்சமாகவும் இடம் பெறும். நீண்ட நாளைக்குப்பிறகு மக்கள் திலகத்தின் வாள் சண்டையைக் காண இந்த படம் ஒரு அரிய வாய்ப்பாக உருவாகி வருகிறது.

மீனவர் சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையும், ஆனந்தமாக வாழும் பணக்காரர்களின் வாழ்க்கைப் பிரச்சினையும் பின்னி உருவாக்கப்பட்டு வரும் இந்தப் படத்தை சடையப்ப செட்டியார் தயாரிக்கிறார்.

மீனவ சமுதாயத்தின் அந்த பிற்பட்ட சமுதாயத்தின் மக்களின் பிரதிநிதியாக மக்கள் திலகம் தோன்றும் இப்படம் துரிதமாக வளர்ந்து வருகிறது.

பாலகிருஷ்ணன் காமிராவை கவனிக்கிறார். எம். எஸ். விஸ்வநாதன் இசையமைக்கிறார்.

கதைவசனம் எழுதி ஸ்ரீதர் இயக்குகிறார்.

## நெஞ்சில் நிறைந்தவள்

ஸ்ரீதுர்காதேவி புரொடக்ஷன்ஸ் என்ற பட நிறுவனத்தினர் "நெஞ்சில் நிறைந்தவள்" என்ற பெயரில் ஒரு புதிய படத்தினை தயாரிக்கின்றனர். இப்படத்தில் விஜயகுமார், ஜெயசித்ரா, சந்திரகலா, எஸ். வி. சுப்பையா, மேஜர் சுந்தரராஜன், தங்கவேலு, மனோரமா, ஐசரிவேலன் மற்றும் பலர் நடிக்கின்றனர். கதைவசனத்தை குடந்தை சுப்பையா, எழுத, கே. வி. மகாதேவன் இசையமைக்க, சி. என். சண்முகம் டைரக்ட் செய்யும் இப்படத்தின் படப்பிடிப்பு கடந்த 30-ந் தேதி வாகினி ஸ்டுடியோவில் தொடங்கியது.



"உத்தமன்" படத் தயாரிப்பாளர் வி. பி. ராஜேந்திர பிரசாத் தயாரித்த அத்தனை படங்களிலும் கதாநாயகியாக நடிப்பவர் மஞ்சுளாதான் இப்போது வி. பி. ராஜேந்திரபிரசாத், மஞ்சுளா இருவரும் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து வருகிறாகள். இத்தனைக்கும் இருவரும் தம்பதியரல்ல. வெறும் நண்பர்கள்தானாம்.



பார்வையில் கொஞ்சம் பருகிய அழகைக் கைகளும் சுவைத்துப் பார்க்கட்டுமே

பாதத்தில் தொடங்கி கூந்தலின் வரையில் ஆனந்தராகம் கேட்கட்டுமே.

(மழைமேகம் படத்தில் முத்துராமன், சாரதா.)

## உதய சினிமா

புகழ்மிக்க பல தமிழ்ப் பத்திரிகைகளில் பணிபுரிந்து அனுபவம் மிக்கவரான அருணோதயத்தை ஆசிரியராகக் கொண்ட உதய சினிமா பத்திரிகையில் திரையுலகச் செய்திகள் ஏராளமாக இடம் பெற்றுள்ளன. புதுமுகங்களை வரவேற்கும் பாணியில் படங்களுடன் பேட்டிக் கட்டுரைகள் நடுநிலையுடன் எல்லா கலைஞர்களின் செய்திகளையும் வெளியிட்டிருப்பது பாராட்டுதலுக்குரியது.

கிடைக்குமிடம்:
"உதயசினிமா"
பஜனைகோவில் தெரு
புலியூர், சென்னை-24

## மக்கள் முழக்கம்

பொன்ஞானசேகரனை ஆசிரியராகக்கொண்ட "மக்கள் முழக்கம்" என்ற பத்திரிகையில் அரசியல், சினிமா செய்திகள் இடம் பெற்றுள்ளன. படங்களே இல்லாமல் வெறும் எழுத்துக்களாகவே இருப்பதால் கவர்ச்சியை விரும்பாத பத்திரிகை என்பதை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். கதை, கட்டுரை, கவிதைகள் நிறைந்த அவியல் பத்திரிகை மக்கள் முழக்கம்.

கிடைக்குமிடம்: பொன்ஞானசேகரன், 57 பி. எச். ரோடு, சென்னை-7.

## ஷோரூம் திறப்பு விழா

செங்கல்பட்டு குப்புசாமிதெருவில் 11-ம் எண்ணுள்ள கட்டிடத்தில் ஐ. ஜே. எண்டர்பிரைசஸ் என்ற தவணைமுறை சீட்டு கம்பெனி திறக்கப்பட்டது. இதன் திறப்பு விழா கடந்த 30-ந் தேதி காலை 6 மணியளவில் நடந்தது.

சென்னை அருள்ஜோதி நிறுவன அதிபர் வி. தெய்வசிகாமணி தலைமை தாங்கினார். சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் எஸ். அடைக்கலம் 'ஷோரூமை"த் திறந்துவைத்தார். ஆர். அழகேசன் அனைவரையும் வரவேற்றார் விழாவில் நகர பிரமுகர்களும், பத்திரிகையாளர்களும் திரளாக கலந்துகொண்டனர்.

## திருமணம்

ஒசூர் நகர புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். மன்ற பொறுப்பாளர் எம். ஏ. சேக்பரிதுவுக்கும் நெல்லை கே. அப்துல்கரீமின் புதல்வி ஜன்னத்துல்பிர்தவுஸ் பேகத்துக்கும் திருமணம் நடந்தது. தர்மபுரி மாவட்ட எம்.ஜி. ஆர். புகழ் பரப்புக் குழு செயலாளர் இராம இரவிப்பிரகாஷ், பொருளாளர் எச். அப்துல்கான், ஏ. கே. அரப்ஜான் மற்றும் பலர் மணமக்களை வாழ்த்தினர்கள்.

## மதன மாளிகை (விமர்சனம்)

சிறந்த இசையமைப்பு, உள்ளத்தைக் கிறங்கவைக்கும் கவர்ச்சி நடனங்கள், வண்ணத்தில் பம்பாயில் எழில்மிகு படப்பிடிப்பு, போதாக்குறைக்கு ரெட்லைட் ஏரியா (சிவப்புவிளக்குப் பகுதி) "கசாமுசா' இத்தனையும் கொண்ட பொழுதுபோக்கு சித்திரம்தான் "மதன மாளிகை". எனவே கதையைப் பற்றி எழுதவேண்டிய அவசியமில்லை. தொடக்கத்தில் சிவகுமார் ஓடி ஆடிப் பாடும்போதே கதையை ஊகித்துவிட முடிகிறது.

கதாநாயகன் சிவகுமார் "ஜிலு ஜிலு'வென்று விநாடிக்கொரு ஆடைகளில் டாலடிக்கிறார். முதல்தரமான நடிப்பு. ரெயிலில் தற்கொலை செய்யும் ஜக்கு வேடம் ஹைகிளாஸ். சேரிப் பாஷை பேசி டாக்டரை கொலை செய்வது சுவையான கட்டம். கடற்கரையில் ஓடிக் களைப்பது பலே! "சிவப்பு டோப்பா" வுடன் அல்காவுடன் போடும் ஆட்டத்திலும் சிவகுமார் குறை வைக்கவில்லை. வெளுத்துக்கட்டியிருக்கிறார். சபாஷ் சிவகுமார். இந்தி நடிகை அல்காவுக்கு செக்ஸியான உடல். பொருத்தமான வாயசைப்பு கை கொடுத்திருக்கிறது. "மல்லிகைப் பூ" நடனம் கிளுகிளுப்பூட்டுகிறது.

சிவப்பு ரோஜாவுடன் அறிமுகமாகும் பிரமிளாவுக்கு ஏற்ற வேடம். ஜொலிக்கிறார். கும்மியடிப்பாட்டு கோலாகலமாக இருக்கிறது. குண்டு இந்திநடிகை மனோரமா சிரிப்பூட்டுகிறார்.

மது குடிக்கும் காட்சிக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது அல்லவா? அதனால் தூக்கமாத்திரை சாப்பிட்டு அரைத்தூக்கத்தில் (போதையில்தான்) சிவகுமார், அல்கா, ஸ்ரீகாந்த், மனோரமா ஆகியோர் ஆடுகிறார்கள். (தணிக்கைக்குழுவினர் ஏமாந்து விட்டார்கள்)



மனோரஞ்சன் இந்திப் படக் காட்சிகளைக் காப்பியடித்து சிவப்புவிளக்கு பகுதி நடனம், தேங்காய் நகைச்சுவை ஆகியவற்றைப் புகுத்தியிருக்கிறார்கள். வில்லன் முத்தையா (நல்ல முகவெட்டு) நன்றாக நடித்திருக்கிறார்.

போலிச்சாமியார் சுருளிராஜன் பால்பாயாசம் ஊற்றுவது, கருவாடு திருடுவது கொஞ்சம் சிரிப்பை வரவழைக்கிறது. மனோரமா அலட்டுவதும் சுவைதான்.

புலமைப்பித்தனின் பாடல்கள் அனைத்தும் கருத்தாழமுள்ளவை. எம் பி. சீனிவாசன் இசையில் "மல்லிகைப்பூ", "ஒரு சிவனப் பறவை", "காஷ்மீர் ரோஜா" ஆகிய பாடல்கள் காதில் ரீங்கார மிடுகிறது. இனிமை இனிமை

வெங்கட்டின் காமிரா பம்பாய் ஒபராய் ஷெராட்டன் ஓட்டலைப் பிய்த்துப் பிய்த்த எடுத்திருக்கிறது. பிரமாதமான படப்பிடிப்பு. டி. என். பாலுவின் வசனத்தில் குழப்பமோ, வளவளாவோ இல்லை. குளிர்ச்சியூட்டும் துல்லியமான கலர். டைரக்டர் விஜயன் இன்விக்டரி ஸ்டாண்ட்.

சிவகுமாருக்கும், தயாரிப்பாளர் என். வி. ராமசாமிக்கும் மகத்தான வெற்றி.

மொத்தத்தில் ரசிகர்களை மயக்கும் மதன மாளிகை.

## க்ளோசப்

○ 'பட்டிக்காட்டு ராஜா' வண்ணப்படத்தை தயாரித்த ரவி கம்பைன்ஸார் அடுத்து ஒரு படத்தினை தயாரிக்கின்றனர். இப்படத்தில் முத்துராமன், ஸ்ரீபிரியா விஜயகுமார், படாபட் ஜெயலட்சுமி, பண்டரிபாய், தேங்காய் சீனிவாசன் மற்றும் பலர் நடிக்கின்றனர். எம். எஸ் விஸ்வநாதன் அமைக்க, என். எஸ். ராஜேந்திரன் தயாரிக்கும் இப்படத்தை கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரக்ட் செய்கிறார்.

○ காரைக்காலில் அருணாசல ஆசாரிக்கு மகனாகப் பிறந்த தங்கவேலு "சித்தி" கொடுமை தாங்க முடியாமல் சென்னைக்கு ஓடிவந்து இப்போது பிரபல சிரிப்பு நடிகராகத் திகழ்கிறார். நடிகை எம். சரோஜாவை திருமணம் செய்துகொண்ட கே. ஏ. தங்கவேலுவின் முதல் மனைவி பெயர் ராஜாமணி. தங்கவேலு நடித்த முதல் படம் "சம்சாரம்" வெளிவரவேயில்லை.

○ மதுரையில் பிறந்த எம். என். ராஜத்தை திரையுலகில் அறிமுகப்படுத்திய பெருமை கலைவாணர் என். எஸ். கே.யைச் சேரும். ராஜத்தின் கணவர் ஏ. எல். ராகவன் ஒரு பின்னணி பாடகர். ராஜம் மட்டும் குறைந்தவரா? "நல்லதம்பி" "பைத்தியக்காரன்" ஆகிய படங்களில் எம். என். ராஜம் சொந்தக்குரலில் பாடியிருக்கிறார்.

○ "நான் பாலச்சந்தர் படத்தில் நடிக்கிறேன், நான் எஸ், பி. முத்துராமன் படத்தில் நடிக்கிறேன்" என்று சொல்லித் திரியும் இளம்பெண்கள் பலர் கோடம்பாக்கம் பாலத்துக்கடியில் வாடிக்கையான 'தொழிலை' தொந்தரவில்லாமல் செய்து வருகிறார்கள். இந்த நள்ளிரவு அழகிகளிடம் பலியாகி பணத்தை இழக்கும் பேதை வாலிபர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது.

○ தமிழ்த்திரையில் முதன்முதலாக பரபரப்பை ஏற்படுத்தி நீச்சலுடையில் தோன்றிய கவர்ச்சி நடிகை வித்யாவதி, ஜெயலலிதாவின் சித்தி. (சந்தியாவின் தங்கை) விமானப் பணிப்பெண் (ஏர் ஹோஸ்டஸ்) வேலை செய்துகொண்டிருந்த வித்யாவதியை சினிமாவில் சேரும்படித் தூண்டியவர் நடிகை பத்மினி.

## உணர்ச்சிகள்

கமலஹாசன், ஜெயசுதா நடித்த மலையாளப்படமான "ராசலீலா"வை பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு வினியோகஸ்தர் குப்புசாமி (உமா தியேட்டர் அதிபர்) போட்டுக் காட்டினார்.

சென்னை நியூஎல்பின்ஸ்டன் தியேட்டரில் ஒரு வாரத்துக்கு மட்டுமே இப்படத்தை ஒப்பந்தம் செய்ததாக அவர் கூறினார். ஆனால் அந்தப் படம் நியூஎல்பின்ஸ்டனில் 80-வது நாளைத் தாண்டி வெற்றிகரமாக ஓடுகிறது. ஆனால் "ராசலீலா"வின் தமிழ்ப் பதிப்பான "உணர்ச்சி"கள் படத் தயாரிப்பாளருக்கும், டைரக்டருக்கும் சூடு, சொரணை, விவஸ்தை எதுவுமே கிடையாதா?

இத்தனைக்கும் "உணர்ச்சி"கள் படம் பாதி முடியும் போதுதான் "ராசலீலா" தொடங்கப்பட்டது. இரு படங்களிலும் கமலஹாசனே கதாநாயகன். "ராசலீலா" வெற்றியடைந்தபோது உணர்ச்சிகள் மட்டும் டப்பாவுக்குள் முடங்குவதேன்? சினிமா பத்திரிகைகளின் மகத்துவத்தையும், விளம்பரத்தின் பயனையும் தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் உணராதவரை தமிழ்ப்படவுலகம் உருப்படப் போவதில்லை. "உணர்ச்சிகள்" போன்ற படங்களும் ஓடப்போவதில்லை. இது உறுதி.

# வாரம் ஒரு படம் திட்டம் படுதோல்வி

வாரம் ஒரு படத்தை மட்டுமே திரையிட வேண்டும் என்று சமீபத்தில் தமிழ்ப்பட அதிபர்கள் முடிவெடுத்தது தெரிந்ததே. தொடக்கத்திலேயே இந்தத் திட்டம் படுதோல்வியடைந்தது. ஜூன் 25-ந்தேதி "உத்தமன்". "உணர்ச்சிகள்" ஆகிய இரு படங்கள் வெளிவந்தன. ஜூலை 2-ந்தேதி "மதன மாளிகை", "சந்ததி" ஆகிய இரு படங்கள் திரையிடப்பட்டன, "மதன மாளிகை" சந்ததி ஆகிய இரு படங்களிலும் சிவகுமார் நடித்திருக்கிறார். ஜூலை 2-ந் தேதியில் மதனமாளிகை மட்டுமே திரைக்கு வருவதாக இருந்தது. ஆனால் நடிகர் சங்க செயலாளர் மேஜர் சுந்தரராஜன், தயாரிப்பாளரிடம் அதே தேதியில் "சந்ததி" படத்தையும் வெளியிடும்படி தைரியமூட்டி இருக்கிறார். சபாஷ்!

படங்கள் நல்ல வசூலைப் பெறவேண்டுமானல் கருத்து, தரம், திறமைமிக்க நடிகர்கள் விஷயத்தில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமே தவிர, வாரம் ஒரு படம் என்று "பிரகஸ்பதி" தீர்மானத்தை எடுத்திருக்கவேண்டியதில்லை.

ஏற்கெனவே தயாரிப்பிலுள்ள நூற்றுக்கணக்கான படங்களை "வாரம் ஒருமுறை" என்ற விதிமூலம் எப்படி வெளியிட முடியும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் சிந்தித்ததாகவே தெரியவில்லை. எப்போது படம் வெளியாகும்? போட்ட பணத்தையாவது (நட்டமில்லாமல்) எடுக்க முடியுமா? என்ற பிரச்னையில் அல்லாடிக்கொண்டிருக்கும் பட அதிபர்கள் இந்த விதியை ஆதரிக்கவே மாட்டார்கள்.

தியேட்டர்கள் குறைவாயிருந்து படங்கள் அதிகமாகத் தயாராகியிருந்தாலாவது வாதத்துக்கு இந்த விதியை ஒத்துக்கொள்ளலாம். ஆனால் சென்னையில் இப்போது பெரும்பாலான தியேட்டர்களில் புதிய படங்கள் வெளியாகாமல் போகவே பழைய படங்களையே திரையிட்டு வருகிறார்கள். அதுமட்டுமில்லாமல் ஒரே நேரத்தில் பல படங்கள் திரைக்கு வந்தாலும் நல்ல படங்கள் வெற்றிபெற்றே இருக்கின்றன என்பதற்கு சாட்சிகள் பல உண்டு.

எனவே வாரம் ஒரு படம் என்ற விதியை மறுபரிசீலனை செய்ய வேண்டும். (அதற்கும் வேலையில்லாமல் போய்விட்டது. திட்டமே தோல்வியடைந்துவிட்டதே!)

## மினி நியூஸ்

○ உதயம் புரொடக்ஷன்ஸ் தயாரித்து மக்கள் திலகம் நடித்து வெற்றிக்கொடி நாட்டிய "பல்லாண்டு வாழ்க" படத்தை உதயம் புரொடக்ஷன்சாரே தெலுங்கில் தயாரிக்கிறார்கள். "மாதெய்வம்" என்று பெயரிட்டுள்ள இந்தப் படத்தில் மக்கள் திலகம் நடித்த வேடத்தில் என்.டி. ராமாராவ், லதா வேடத்தில் ஜெயசித்ராவும், எம். என். நம்பியாரும் நடிக்கிறார்கள். கே. வி. மகாதேவன் இசையமைக்க எஸ்.எஸ். பாலன் (ஜெமினி அதிபர்) டைரக்ட் செய்கிறார். இதயக்கனி படத்தை தெலுங்கில் "பிரேமா தர்மமா" என்ற பெயரில் "டப்பிங்" செய்து வெளியிடுகிறார்கள்.

○ விரைவில் நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் நடிகர் ரோனல்டு ரீகன் போட்டியிடுகிறார். இவர் வெற்றி பெற்றால் உலகத்தில் உள்ள அத்தனை நடிகர்களுக்குமே கொண்டாட்டமும், வரலாற்றுச் சிறப்பும் இருக்கும். இப்போது அமெரிக்கத் தூதராக இருக்கும் ஷேர்லிடெம்பிள் என்பவர் சிறுவயதில் சினிமாவில் நடித்து ஏராளமான ரசிக உள்ளங்களைக் கவர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. வடநாட்டு நடிகர்கள் அரசியலில் பங்கேற்க தயக்கம் காட்டுவது ஏன்?

○ இந்தியாவில் சினிமா தொடங்கி 80 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி பம்பாயில் திரைப்படக் கண்காட்சி நடந்தது. ஜெமினியின் "அவ்வையார்", "சண்டிராணி" ஆகிய படங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

○ நூற்றைம்பது படங்களுக்கு மேல் நடித்திருக்கும் ஜெய்சங்கர் முதல் தடவையாக ஊமை



வேடத்தில் நடிக்கிறார். படத்தின் பெயர் வாயில்லாப்பூச்சி. கே. எஸ். கோபாலகிருஷ்ணன் கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார்.

# சிவப்புவிளக்கு கதைகள் அகிலன் வருந்துகிறார்!

"சிவப்பு விளக்கு கதைகளை வெளியிட்டு மக்களைக் கெடுக்கும் பத்திரிகைகளையும் அரசு தடைசெய்யவேண்டும்" என்று பிரபல நாவலாசிரியர் அகிலன் வேண்டுகோள் விடுத்தார்.

மெர்சி பப்ளிகேஷன்ஸ்சாரின் 'காலம்தான் பதில் சொல்ல வேண்டும்" என்ற புத்தக வெளியீட்டுவிழா சென்னை கிறித்தவ கலை தொடர்பு நிலையத்தில் நடந்தது. விழாவில் அகில இந்திய (சென்னை) வானொலி நிலையத்தின் அதிகாரியும் பிரபல நாவலாசிரியருமான அகிலன் பேசியதாவது:

"எந்த சமூகத்தினர் அதிகமாக புத்தகங்களை படிக்கிறார்களோ அந்த சமூகம்தான் முன்னேறும் என்பது எல்லோருமறிந்த விஷயமாகும். உலகப் பொதுமறையான திருக்குறள் காரணமாக தமிழின் புகழ் உலகம் முழுவதும் பரவியுள்ளது. இப்போது தமிழ்ப்பத்திரிகைகள் சிலவற்றில் (தினமணிகதிர்) பொதுமக்களை அசிங்கமான வழியில் இழுத்துச் செல்லும் சிவப்பு கதைகளை வெளியிடுகிறார்கள். அதற்கு "நியூவேவ்" என்றும் பட்டம் சூட்டிவிடுகிறார்கள். அவசர நிலைக்குப்பின் பேச்சுரிமைக்கு வரம்பு விதித்திருப்பதால் நிலைமை சற்று சீராகியிருப்பதை அனைவரும் உணர்கிறார்கள். அதைப்போல இது போன்ற சிவப்பு விளக்கு கதைகளை வெளியிடும் பத்திரிகைகளை தடைசெய்யவேண்டும்'.

இவ்வாறு அகிலன் பேசினார்.

விழாவுக்கு வந்திருந்தவர்களை சாம். டி. தாசன் வரவேற்றார். ஜி. தாமஸ் எட்வர்ட் தலைமை தாங்கினார். கவிஞர் எஸ். டி. சுந்தரம் வாழ்த்து வழங்கினார். பிரசாத் ரிச்சர்ட் எழுதிய "காலம் தான் பதில் சொல்லவேண்டும்" என்ற புத்தகத்தில் கிறித்துவ மத கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்ட நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. "மெர்சி பப்ளிகேஷன்ஸ்2பாரதியார் தெரு சென்னை-18 என்ற முகவரியில் மேற்கண்ட புத்தகத்தை பெற்றுக்கொள்ளலாம்.

---

○ தேவர் தயாரிக்கும் எல்லாப் படங்களையுமே வாகினி அதிபர் நாகிரெட்டிதான் தொடங்கி வைக்கிறார் என்று பிரபல சினிமாப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது அது முற்றிலும் தவறு. "தாய்க்குப்பின் தாரம்" படத்தை தொடங்கிவைத்தது ஏழு வயது பெண் குழந்தை.

○ மக்கள் திலகம் நடிக்கும் "இன்றுபோல் என்றும் வாழ்க" என்ற படத்தில் சங்கீதா நடிக்கிறார் என்று "ஸ்கிரீன்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. புகழ்பெற்ற ஸ்கிரீன் போன்ற பத்திரிகைகள் தவறான செய்தி வெளியிடுவது வாசகர்களைக் குழப்பத்துக்குள்ளாக்குகிறது. ஜெயார் மூவிஸ் படத்தில்தான் சங்கீதா நடிக்கிறார்.

○ தமிழக அரசு நிர்வாகத்தில் உள்ள சென்னை கலைவாணர் அரங்கத்தில் பகல் 11 மணி காட்சியில் தினமும் இந்திப் படங்களை மட்டுமே வெளியிடுகிறார்கள். குறைந்தபட்சம் வசூலே இல்லாமல் டப்பாவுக்குள் முடங்கிக் கிடக்கும் தமிழ்ப்படங்களை யாவது திரையிடலாமே! அது மட்டுமில்லாமல் சிறுவர்களுக்கும் தமிழ்ப்படங்களைக் காட்டினால் இளம் பிராயத்திலேயே தமிழ்ப் படங்களைப் பார்க்கத் தூண்டும் ஆர்வத்தை வளர்க்க முடியுமே! நலிந்து கிடக்கும் தமிழ்ப்பட உலகைக் காப்பாற்ற எல்லாத் தியேட்டர்களிலும் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 10 மாதமாவது தமிழ்ப்படங்கள் திரையிட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. இந்த நேரத்தில் கலைவாணர் அரங்கமே இந்தக் கோரிக்கைக்கு முரண்பாடாக நடந்தால் அது சரியில்லை. கலைவாணர் அரங்கத்தில் உடனே தமிழ்ப்படங்களைத் திரையிட வேண்டும்.

○ அவசர நிலைக்கு முன்னும் பின்னும் பிரதமர் இந்திராகாந்தியின் நிலை குறித்து எடுக்கப்பட்ட கலர்ப்படம் அமெரிக்காவில் திரையிடப்படுகிறது. இந்திரா காந்தி பேட்டி, சுற்றுப்பயணம் ஆகியவையும் இப்படத்தில் இடம் பெற்றுள்ளன. கடந்த 1963-ம் ஆண்டு பிரதமர் நேருஜியைப் படமெடுத்த அமெரிக்கர் ஆர்னல்டு மிக்கேல் என்பவர் தான் இந்தச் செய்திப் படத்தையும் படமாக்கினார். என்ன ஒற்றுமை?

○ சென்ற ஆண்டு பள்ளி யிறுதி (எஸ். எஸ். எல். சி.) தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவி கவுரி வானொலியில் சிறப்புத் தேன் கிண்ணம் அளித்தார். அப்போது "என்னை மிகவும் சுறுசுறுப்பாக வைத்து பழக்கச் செய்த பாடல்" என்று கூறி "தூங்காதே தம்பி தூங்காதே" என்ற நாடோடி மன்னன் படப்பாடலை ஒலிபரப்பினார். என்னைத் தாலாட்டியது என்று வர்ணித்து "இந்தப் பச்சைக்கிளிக்கொரு செவ்வந்திப்பூ" என்ற நீதிக்குத் தலைவணங்கு படப்பாடலைப் போட்டார்.

○ சர்வதேசப்பட விழா நீதிபதி குழுவில் "நாளை நமதே" படத்தின் இயக்குனர் கே. எஸ். சேதுமாதவனும் இடம்பெற்றிருக்கிறார்.

## நீ வாழ வேண்டும்

வேதாசலம் கள்ளக்கடத்தல், போலி மருந்து தயார் செய்தல், இப்படியாக பல குறுக்குவழிகளில் பணம் சம்பாதிப்பவர். தன்னுடைய நடவடிக்கைகளுக்கு எதிராக இருந்த போலீஸ் அதிகாரி ரவியை சரிகட்டுவதற்காக அவருக்கு ஒரு விருந்து கொடுக்கிறார். அந்த விருந்தில் தன்னுடைய காதலியான சரசாவை நடனமாடச் செய்கிறார்.

அந்த விருந்தில் கலந்து கொண்ட போலீஸ் அதிகாரி ரவி, தான் என்றும் கடமையிலிருந்து தவறாதவன் என்பதை வேதாசலத்திற்கு உணர்த்திவிட்டுச் செல்கிறார்.

இப்படியொரு காட்சி பாத்திமா அமுதா கம்பைன்ஸ் "நீ வாழ வேண்டும்" படத்திற்காக பிரசாத் படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப்பட்டது. ரவியாக முத்துராமனும், வேதாசலமாக வி. கோபாலகிருஷ்ணனும், சரசாவாக ஏ. சகுந்தலாவும் மற்றும் இக்காட்சியில் வெண்ணிற ஆடை மூர்த்தி, டைப்பிஸ்டு கோபு, எம். ஆர். கணேஷ் ஆகியோரும் நடித்தனர். சுமித்ரா கதாநாயகியாக நடிக்கும் இப்படத்தில் சுகுமாரி, மனோரமா, சுருளிராஜன், சச்சு ஆகியோரும் நடிக்கின்றனர். இப்படத்தின் இசையை எம். எஸ். விஸ்வநாதன் அமைக்க, கதை வசனத்தை விஜயகணேசன் எழுத. என். ஆர். அமுதா, திருச்சி சுலைமான் இருவரும் தயாரிக்கும் இப்படத்தை ஏ. பீம்சிங் டைரக்ட் செய்கிறார்.



மாலையிலே வரும் மன்னனுக்கின்று மன்மத ஆராதனை
மகிழ்வினில் நெஞ்சம் மயங்கிட நின்று மங்கல நீராடுது
(சந்ததி படத்தில் மேஜர் சுந்தரராஜன், ஸ்ரீபிரியா.)

## தமிழ் சினிமா பத்திரிகையாளர் சங்க கூட்டம்

பொதுத்துறையிலும், சினிமா துறையிலும் உள்ளவர்கள் அனைவருமே தங்களுக்கென்று தனித்தனியாக சங்கம் (யூனியன்) வைத்து செயல்படுகிறார்கள் அல்லவா? "தமிழ் சினிமா பத்திரிகையாளர் சங்கம்" என்ற பெயரில் ஒரு புதிய அமைப்பினை உருவாக்க சென்னையில் பத்திரிகையாளர்கள் ஒன்று கூடினார்கள். பத்திரிகையாளர்கள் சங்க அமைப்பின் அவசியம் அவசரம் பலன் குறித்து விவாதித்தனர். சங்கத்தை முதலில் அரசு பதிவு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. பத்திரிகையாளர்களுக்கு மது விருந்து கொடுக்கும் பழக்கத்தை உடனே நிறுத்த வேண்டும். எல்லா படங்களுக்கும் எல்லா பத்திரிகைகளுக்கும் குறைந்தபட்சம் ஒரு விளம்பரமாவது கொடுக்க வேண்டும். ஆகிய கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

பத்திரிகையாளர்கள், கலைஉலக சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: தமிழ் சினிமா பத்திரிகையாளர் சங்கம், 60 சீனிவாச பெருமாள் சன்னதி தெரு இராயப்பேட்டை சென்னை-600014.

## நேயர் கடிதம்

கணேசன், தோல்விப் படங்களை தருவதில் ஓர் வரலாறு படைத்து வருகிறார். அது மட்டுமல்ல. அவரது படங்களின் மூலம் தமிழ்ப்படவுலகுக்கே ஓர் களங்க முத்திரையை ஏற்படுத்தி வருகிறார். தமிழகத்தின் பெரிய நகரங்களில் மட்டுமல்ல சிற்றூர்களிலும் கணேசனின் படங்கள் படுதோல்வியடைந்து வருகின்றன. எங்கள் ஊரான ஓசூரிலும் கணேசனின் புதுப்படங்களே, மக்கள்திலகத்தின் பழைய படங்கள்முன் நிற்க முடியாதவாறு படுதோல்வி கண்டு ஓடியுள்ளன. ஸ்ரீபாலாஜியில் கணேசனின் உனக்காக நான் 4 நாட்களும், வைரநெஞ்சம் 3 நாட்களும ஓடியது. ஆனால் பலமுறை திரையிடப்பட்டு மீண்டும் திரையிடப்பட்ட மக்கள் திலகத்தின் பழைய படங்களான முகராசி 8 நாட்களும், கலங்கரை விளக்கம் 5 நாட்களும் வெற்றிகரமாக ஓடியுள்ளன.

இதுமட்டுமின்றி ஸ்ரீபாலாஜியில் வைரநெஞ்சம் திரையிடப்பட்டபோது அதற்கு போட்டியாக பாலசுப்பிரமணியாவில் திரையிடப்பட்ட டப்பிங் படமான "நாக கன்னி" நல்ல வசூலுடன் 4 நாட்கள் ஓடியது. கணேசனின் படங்கள் 'டப்பிங' படங்களைவிட படுமட்டமாகி விட்டன என்பதற்கு இது ஓர் உதாரணம்!

இராம. இரவிப்பிரகாஷ்.
ஓசூர்.

ஃ ஃ ஃ

கடந்த இதழில் வெளிவந்த "கணேசனுக்கு எச்சரிக்கை" செய்தி என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. பெருத்த உடம்பு படைத்த அந்த சின்னமலை எங்கள் ஊரில் அரண்மனை போன்ற அமைப்புடைய வீட்டைக் கட்டியிருக்கிறார். சின்னமலைச் செட்டியார் வாலைச் சுருட்டிக்கொண்டு மூலையில் ஒதுங்கிக் கிடக்க வேண்டும். இல்லையென்றால் வாலை ஒட்ட நறுக்கிடுவேன் என்று இக்கடிதம் மூலம் பகிரங்கமாக எச்சரிக்கிறேன். மக்கள் திலகத்தின் எதிரிகளைச் சின்னாபின்னப்படுத்தும் தூய பணியில் ஈடுபட்டுள்ள தங்கள் ஏடு வெல்க என்று வாழ்த்துகிறேன்.

பெரி. சுப்பையா
பொள்ளாச்சி-3.

ஃ ஃ ஃ

காரைக்குடியில் திரையிடப்பட்ட டாக்டர் சிவா 10 நாட்களும், பாட்டும் பரதமும் 12 நாட்களும், வைரநெஞ்சம் 11 நாட்களும், அன்பே ஆருயிரே 9 நாட்களும் மட்டுமே ஓட்டப்பட்டு மண்ணைக் கவ்வின. ஆனால் மக்கள் திலகத்தின் "உலகம் சுற்றும் வாலிபன்" இரண்டாவது முறையாக சமீபத்தில் திரையிடப்பட்டு 15 நாட்களும், பலமுறை திரையிடப்பட்ட சமீபத்தில் "வேட்டைக்காரன்" 12 நாட்களும் ஓடி மக்களின் பேராதரவுடன் நல்ல வசூலைப் பெற்றுத் தந்தது. பாவம் கணேசன்பிள்ளைகள்!

எஸ். அப்துல்காதர்
தரங்கம்பாடி வீதி
காரைக்குடி.

ஃ ஃ ஃ


தற்போது சென்சார் போர்டு அர்த்தமற்ற முறையில் தன் வேலையைச் செய்கிறது என்பது தெள்ளத்தெரிந்த விஷயம். தமிழ்ப்படங்களில் எந்த எந்தக் காட்சிகளை மக்கள் பார்க்கக் கூடாது என்று தயைதாட்சணயமின்றி வெட்டித் தள்ளுகிறார்களோ அதே காட்சிகளை (அல்லது அதைவிட மோசமான காட்சிகளை) ஹிந்திப் படங்களிலோ, ஆங்கிலப் படங்களிலோ பார்க்கிறார்கள். இதனால் எப்படி சென்சார் போர்டு தன் கடமையைச் சரிவர செய்ததாகக் கருத முடியும்? தமிழ்ப் படங்களில வரும் கதாநாயகிகளின நடைக்கு ஒரு தடை, உடைக்கு ஒரு தடை என்று விதிக்கும் சென்சார் போர்டு மற்ற மொழிப் படங்களைப் பார்க்கும்போது தூங்குகிறதா? உதாரணமாக சமீபத்தில் வெளிவந்த "பரூத்" என்ற படத்தில் ஷோமா ஆனந்த் நீச்சலுடையில் தோன்றி நடித்த காட்சிகள் எவ்வளவு "பளிச்"சென்று இருந்தது என்பது படம் பார்த்தவர்களுக்குத் தெரியும். விழித்துக்கொள்ளட்டும் சென்சார் போர்டு.

பி. மணி
குமராட்சி.

ஃ ஃ ஃ

சமீபத்தில் வெளியான "ஒரு ஊதாப் பூ கண் சிமிட்டுகிறது" படத்தில் சில வசனங்களைக் கேட்டபோது அவற்றை சென்சார் கேட்டுத்தான் அனுமதித்தார்களா அல்லது காதை மூடிக்கொண்டுதான் அனுமதி அளித்தார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. கணவனுடன் வாழும் ஒரு பெண் இன்னொருவனுடன் வாழ விரும்புவதாக வாய்விட்டு பச்சையாக கூசாமல் சொல்கிறார். "அபூர்வ ராகங்கள்' படத்தில்பாஸ்டர்ட்(தேவடியாள் மகன்) என்ற வார்த்தை இடம் பெறுகிறது. மேற்கண்ட படங்களின் வசனகர்த்தாக்களுக்குச் சூடு சொரணை எதுவுமே இல்லையா! இனிமேலாவது அசிங்கமான வசனங்களை சென்சார் தணிக்கை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஏ. பி. பொன்னுசாமி
பெங்களூர்-53.



கண்படும்போதே கசங்கிய மேனி கைபடும்போது என்னாகும்
காவலைமீறிப் போகிற வேளை செவ்விதழ்மேலும் புண்ணாகும்
(விஜயகுமார், சுமித்ரா படம்: ஆசை 60 நாள்)

# தமிழ்க் கதாசிரியர் கண்ணீர்விடுகிறார்

எப்போதாவது ஒரு படத்தயாரிப்பாளர் ஒரு கதாசிரியரைக் கண்டால் கேட்கும் ஒரே கேள்வி. "ஒரு நல்ல கதையாக இருந்தால் சொல்லுங்கள் சார். அடுத்த படத்துக்கு வேண்டும்" என்பதுதான். ஆனால் இன்று வரையில் அந்த "நல்ல கதை" எது என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியாமலே இருக்கிறது. அந்த பரம ரகசியத்தை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒரு கதாசிரியன் சம்பந்தப்பட்டவரையில் எந்தக் கதையும் நல்ல கதைதான். தெளிவான கதாபாத்திரங்கள், உணர்ச்சி ததும்பும் நாடக அம்சம் நிறைந்த சம்பவங்கள், விறுவிறுப்புடன் மேன்மேலே வளர்ச்சியடைந்துகொண்டே போகும் கதைப் போக்கு இவை நிறைந்த எந்தக் கதையானாலும் நல்ல கதைதான்.

படத் தயாரிப்பாளர் சம்பந்தப்பட்ட வரையில் எந்தப் படத்தை ஏராளமான மக்கள் வந்து கண்டு "சபாஷ்" போடுகிறார்களோ அந்தப் படத்தன் கதைதான் நல்ல கதை. சினிமா என்பது பொருளாதாரத்துடன் இணைக்கப்பட்டிருப்பதால் எவ்வளவுக்கெவ்வளவு பெருவாரியான மக்கள் படத்தை ரசிக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அந்தக் கலை வளர்ச்சியடைய முடியும். இது ஒரு மறுக்க முடியாத உண்மை. எனவே எந்தக் கதை ஏராளமான மக்களின் ரசிப்பை பெறுகிறதோ அந்தக் கதைதான் சிறந்த கதை.

சில படப்பிடிப்பாளர்கள் ஒரு படம் வெற்றிகரமாக ஓடியதென்றால், அதை "ஈயடிச்சான் காப்பி' பண்ணி மற்றொரு படம் எடுக்கிறார்கள். அது வெற்றியடையாமல் போகவே, அந்தப் பொறுப்பை பொதுமக்களின்மேல் போட்டு விடுகிறார்கள். "இந்த பொதுமக்களின் சுவை, ரசனையே இப்படித்தான் சார்நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருக்கிறது" என்று நாக்கில் நரம்பியில்லாமல் ஈசியாகப் பேசிவிடுகிறார்கள்.

பின் எப்படித்தான் எல்லோருக்கும் பிடித்த கதையைத் தேர்வு செய்வது? அதற்குத்திட்டமான ஒரு வழியை இதுவரையில் யாரும் கண்டுபிடிக்கவே இல்லை. ஆனால் இதுவரை வெளியான சிறந்த பொதுமக்கள் மதிப்பைப் பெற்ற படத்தின் கதைகளை ஆராய்ந்து பார்த்தால் உண்மை புலப்படும்.

சினிமா என்பது அடிப்படையில் பொழுதுபோக்கு சாதனமே. தன்னை மறந்து சிறிதுநேரம் பொழுதுபோக்கும் நோக்கத்துடன்தான் பொதுமக்கள் தியேட்டருக்குள் நுழைகிறார்கள். அவர்களுடைய மனதுக்குள்ளாக எவ்வளவு போற்றும் நம்பிக்கையாயிருந்தாலும் அவைகளை எளிதாக ரசிக்கும் முறையில் கொடுத்தால்தான் அவர்கள் விரும்பிப் பார்க்கிறார்கள். உயர்ந்த பண்டங்களை வாங்கி வந்தாலும் சாப்பாடு ருசிக்காமல் சமைப்பது அவசியமல்லவா? அதைப் போலவே சினிமாவும் ஒவ்வொரு தடவையும் புதுமையுடன் விளங்கவேண்டியது அவசியமாகிறது. பார்த்ததையே பார்த்து யாரால் தான் ரசிக்க முடியும்?

புதுமையையும் கவர்ச்சியையும் சினிமாவுக்கு அளிக்கக்கூடியவர்கள் கற்பனைநிறைந்த கதாசிரியர்கள் மக்களின் அஸ்திவார நம்பிக்கைகளையும் ஆசை விருப்பங்களையும் உணர்ந்துகொள்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுடைய கலை மதிப்பையும் பொதுமக்களின் பேராதரவைப் பெற முடியும்.

# கொலைகாரனாகி வரும் ஒரு கொள்ளைக்காரன்

சென்னை அயனாவரம் பகுதியில் வார்னிஷ் (கள்ளச் சாராயம்) குடித்து 90 பேர் இறந்திருக்கிறார்கள். கருணாநிதி ஆட்சிக்காலத்தில் பகிரங்கமாக விற்றுவந்த வார்னிஷை இப்போது ஒளிவு மறைவாக விற்கிறார்கள். இதற்குக் காரணம் கருணாநிதி கட்சியினர்தான் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறோம். கருணாநிதி மனைவி தர்மாவின் பெயரில் "ஸ்பிரிட்" அனுமதி (லைசன்சு) இருந்தது. யார் யாருக்கு அந்த ஸ்பிரிட் விற்கப்பட்டது—என்ற விவரத்தை போலீசார் விசாரிக்கவேண்டும்.

அதுமட்டுமல்லாமல் கதிரேசன் போன்ற மது தயா தயாரிக்கும் அனுமதி பெற்றிருந்த பேர்வழிகளை விசாரிக்க வேண்டும். தும்பைவிட்டு வாலைப் பிடிக்கும் முறை இனிமேல் பயன் தராது.

சில மாதங்களுக்கு முன் சென்னை கோடம்பாக்கத்தில் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். கருணாநிதி மகன் முத்துவைப் போட்டு "இங்கேயும் மனிதர்கள்" என்ற படமெடுத்த பாப்பாத்தி அம்மாள் என்பவரின் வீட்டுமுன்! இந்தப் படுகொலை நள்ளிரவில் நடந்தது. இதே நபரின் வீட்டில் (கருணாநிதி பதவியிலிருந்து இறங்கிய சில நாட்களில்) நடந்த சோதனையில் இருபதுக்கு மேற்பட்ட பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்ததாக கைது செய்யப்பட்டனர்

அந்தப் படுகொலைபற்றி மீண்டும் விசாரணை நடத்தினால் கருணாநிதி கும்பலின் "தில்லுமுல்லு"கள் வெட்டவெளிச்சமாகும் என்று அந்தப் பகுதி மக்கள் பரவலாகப் பேசிக்கொள்கிறார்கள்.

அதுமட்டுமா?

கருணாநிதியை ஆதரிதது இன்றைக்கு பல பத்திரிகைகள் புற்றீசல் போல வரத்தொடங்கியுள்ளன. பத்திரிகை நடத்துவதற்கு மூலதனம் எவ்வளவு தேவை? லாபம் உண்டா? என்ற பிரச்னை பெரும்பாலோருக்குத் தெரியும். எனவே அந்தப் பத்திரிகைகளுக்கு பணம் கிடைக்கும் விவரத்தை உடனே சேகரித்தால் கருணாநிதி கும்பலின் கறுப்புப்பண வேட்டை அம்பலமாகும். (சமீபத்தில் ஒரு பாங்கியில் இருந்து 30 லட்ச ரூபாயை கருணாநிதி மாற்றியதாக செய்தி வந்தது தெரிந்ததே.)

ஜனநாயகத்தில் எதிரிகளை பேச்சிலும் எழுத்திலும் மட்டுமே வெற்றிகொள்ள வேண்டும் என்பது மரபு. ஆனால் சமீபத்தில் கருணாநிதி கட்சி செயற்குழுக் கூட்டத்தில் எஸ் எஸ். இராசேந்திரன் தாக்கப்பட்டிருக்கிறார். கட்சி தலைமைப் பதவியில் கருணாநிதி நீடிக்கக் கூடாது என்று சொன்ன ஒரே காரணத்தினால் எஸ். எஸ். ராசேந்திரனைக் கொல்ல முயற்சித்திருக்கிறார்கள். வடநாட்டில் ஆர். எஸ். எஸ். என்ற கொலைவெறிப்படையினர் மறைமுகமாக செய்த படுபயங்கரமான செயல்களை கருணாநிதி கும்பல் பகிரங்கமாக செய்யத் தொடங்கிவிட்டன. இதற்குக் காரணம் கருணாநிதியிடம் உள்ள கோடிக்கணக்கான கள்ளப் பணம்தான்.

எனவே, செய்யவேண்டியது என்ன? கருணாநிதி கும்பலை சிறையிலடைத்து கருணாநிதி கட்சியை உடனே தடைசெய்ய வேணடுமாய் இந்திய குடியரசுத் தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர், தமிழக கவர்னர் ஆகியோரைக் கேட்டுக்கொள்கிறோம். இது ஜனநாயகம் உருப்பட வேண்டும் என்று நினைக்கும் தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கை.

# கற்பிழந்த அபலைக்கு எம்.ஜி.ஆர். வாழ்வு!

அப்பாவி இளைஞன் முருகன் உலகம் புரியாத உணர்வுகள் கொண்ட முருகனுக்கு போதுமான அளவுக்கு வசதி வாய்ப்புகள் இருக்கிறது. யாருக்கும் உதவி புரிகிற குணம் படைத்தவர் முருகன். முருகனின் தாய் தனது அண்ணனின் மகள் கங்காவை தன் மகனுக்கு பல வருடங்களுக்கு முன்பே திருமணத்துக்கு நிச்சயம் பேசி வைத்திருந்தாள். பிறகு அவள் இறந்துபோகிறாள். ஆனால் முருகனின் மாமனோ திடீர் பணக்காரராகிவிட்டதால் முருகனுக்கு தன் பெண்ணை தரமுடியாது என்று கூறிவிடுகிறார்.

கிராமத்தின் முக்கியஸ்தர்களை எல்லாம் அழைத்து வைத்து முருகன் நியாயம் கேட்டும்கூட தாய் மாமனான கே. பி. சாமி பெண் கொடுக்க மறுத்துவிடுகிறான். பஞ்சாயத்தாரும் முருகனிடம் இந்தப் பெண் இல்லையென்றால் போகிறது நீ வேறு ஒரு பெண்ணை படித்தவளாகப் பார்த்து மணம் புரிந்துகொள் என்கிறார்கள். முருகனும் அதை சவாலாக ஏற்று சென்னைக்கு வருகிறார்.

காலச் சூழ்நிலையால் நிகழ்ச்சிகள் இடம்மாறுகின்றன. கே.பி. சாமியின் மகளான கங்கா ஓட்டல் முதலாளி குமார் என்பவனை காதலித்து கைவிடப்படுகிறாள்.

தந்தையை வெறுத்துவிட்டு காதலனைத் தேடிப்போய் தன்னை திருமணம் செய்துகொள்ளுமாறு கங்கா கேட்கிறாள். ஆனால் திருமணம் என்பதே பிடிக்காத குமார் அவளை தன்னிடமிருந்து நிரந்தரமாக பிரித்துவிட முடிவு செய்கிறான். தனது ஓட்டல் மானேஜரிடம் கூறி கங்காவை பிரிக்க சூழ்ச்சி செய்கிறான்.

இதற்கிடையில் சென்னைவந்த முருகனை 'ஆல் இன் ஆல்' அருணாசலம் என்ற ஆள் சந்திக்கிறான். அவனிடம் முருகன் தனது திருமண லட்சியத்தை கூறவே அருணாசலம் ஒரு முடிவுக்கு வருகிறான். முருகன் அப்பாவி என்பதைத் தெரிந்துகொண்ட அருணாசலம் ஏதாவது ஒரு பெண்ணை முருகன் தலையில் கட்டிவைத்துவிட்டு கமிஷன் பெற்றுவிட வேண்டும் என்று திட்டம் போட்டு முருகனை ஒரு உஷார் விடுதிக்கு அழைத்துப் போகிறான்.

அந்த உஷார் விடுதியில் பல பெண்கள் இருக்கிறார்கள். யாரை யாவது உனக்குப் பிடித்த பெண்ணை தேர்ந்தெடுத்து நீ திருமணம் செய்துகொள்ளலாம் என்று முருகனிடம் அங்கு கூறுகிறார்கள்.

முருகனும் ஓரளவுக்குநிலைமையை யூகித்துக்கொண்டு ஒவ்வொரு பெண்ணைக பார்க்கிறார். அப்போது ஒரு பெண்ணை பார்த்ததும் முருகனுக்கு பெரிய திகைப்பே ஏற்படுகிறது.

ஆம்...அந்தப் பெண் கங்காவேதான். கங்கா இந்த விடுதிக்கு வருமளவுக்கு என்ன நேர்ந்தது என்று முருகனுக்கு ஆச்சரியம்; பிறகு அதைக் காட்டிக்கொள்ளாமல் கங்காவை அழைத்துக்கொண்டு முருகன் வெளியேறுகிறார்.

கங்கா முருகனைப் பார்த்து நன்றி செலுத்துகிறாள். ஆனால் முருகனோ "எனக்கு மகளான உன்னை நான் இழிவாகக் கருதவில்லை. இந்த நிமிடம் முதல் உன்னை என்னுடைய சகோதரியாக ஏற்றுக்கொள்கிறேன். உன்னுடைய நல்வாழ்வுக்காக பாடுபடுகிறேன்"—என்று கூறுகிறார். கங்காவும், முருகனின் வெள்ளை மனத்தை அறிந்து நன்றியோடு பார்க்கிறாள்.

சென்னைக்கு வந்த முருகனுக்கு மேனகா என்ற பெண் அறிமுகமாகிறாள். ஆனால் அவளிடம் முருகன் தன்னை திருமணம் செய்துகொள்ளும்படி கேட்டதும் அவளுக்குப் பிடிக்கவில்லை, காரணம் முருகன் ஒரு அப்பாவி என்பதால்.

அதன்பிறகு பல சூழ்நிலைகளில் மேனகா முருகனைச் சந்திக்க வேண்டி வருகிறது. அப்போது மேனகாவுக்கு முருகனின் உள்ளத்தூய்மை புரிபடவே முருகனை விரும்புகிறாள். முருகனுக்கும், மேனகாவுக்கும் இடையே காதல் அரும்பி மலர்கிறது.

—இப்படிப்பட்ட காட்சிகள் சுப்பு புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் 'இன்றுபோல் என்றும் வாழ்க' படத்திற்காக படமாக்கப்பட்டன.

முருகனாக மக்கள் திலகம் நடித்தார். மேனகாவாக ராதாசலுஜாவும், கங்காவாக வெண்ணிற ஆடை நிர்மலாவும் நடித்தார்கள். கே. பி. சாமியாக திருச்சி சௌந்தரராசனும், ஆல் இன் ஆல் அருணாசலமாக தேங்காய் சீனிவாசனும், ஓட்டல் மானேஜராக கே. கண்ணனும், குமாராக விஜயகுமாரும் நடித்தார்கள்.

கா காளிமுத்து வசனம்எழுதுகிறார். கே. சங்கர் டைரக்ட் செய்கிறார்.

டி வி. ராஜாராம் ஒளிப்பதிவு செய்கிறார். கலையை அங்கமுத்து கவனிக்கிறார்.

இசையை விஸ்வநாதன் அமைக்கிறார்.

## கேட்டதும் கிடைத்ததும்

வி. ஆர். எஸ், மணியன், சாமிநாதபுரம்.

கே: நம் நடிகைகளில் பெரும்பாலோர் ஏன் திருமணம் செய்துகொள்வதில்லை?

ப: காதல் கட்டங்களிலும் கல்யாணக் காட்சிகளிலும் அடிக்கடி "நடித்து" அலுத்துப் போனது காரணமாயிருக்கலாம்.

கே: லட்சுமி என்ன செய்கிறார்?



ப: தமிழ்க் கலை உலகத்தை காரசாரமாக விமர்சித்த அவர் மீண்டும் தமிழ்ப்படவுலகத்துக்கே வந்துவிட்டார். "வாழ்வு என் பக்கம்" படத்தில் முத்துராமனுடன் நடிக்கிறார். துடிப்பும் திறமையும் கொண்ட அவர் இப்போது மிடுக்காக இருக்கிறார்.

கே: வறுமை என்பது என்ன?

ப: இந்தியாவின் தேசிய சொத்து.

கே: தமிழகத்தில் அதிக நாட்கள் ஓடிய படம் எது?

ப: ஹரிதாஸ்.

இராம. ரவிப்பிரகாஷ், ஓசூர்.

கே: கணேசனின் மட்டமான படங்களும் மிக நீளமாகத் தயாரிக்கப்படுவதால் யாருக்கு நன்மை?

ப: அந்தத் தியேட்டர்களில் நிரந்தரமாகக் குடியிருக்கும் மூட்டைப்பூச்சிகளைக் கேளுங்கள்.

கே: காதல் என்பது தொழிலா? கலையா?

ப: காதல் தெய்வீகமானது. திரைப்படங்களுக்கு அது தொழிலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கே: தற்காலப் பெண்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம்?

ப: நாகரீகம் என்ற போர்வையில் தங்களிடம் உள்ளதை மிகைப்படுத்திக் காட்டுபவர்கள்.

கே: என் அழகான மனைவியை சினிமாவில் சேர்த்துவிடத் தீர்மானித்திருக்கிறேன்?

ப: நீங்கள் "தியாகி"யா?

பி. மணி, குமராட்சி.

கே: மக்கள் திலகம் நடித்து அடுத்து வரும் படம் எது?

ப: வீனஸ் பிக்சர்ஸின் ஊருக்கு உழைப்பவன் ஆகஸ்டு 15-ந் தேதியன்று வெளிவருகிறது.

யூ. சுப்பராமன், மதுரை-9.

கே: டி. எம். சவுந்திரராசன் பற்றி "கசமுசா" என்று செய்திகள் வருகிறதே!



ப: இளைய தலைமுறை பின்னணிப் பாடகர்களுக்கு மறைமுகமாக அவர் கொடுத்த எதிர்ப்பு பயன் தரவில்லை.

(1-ம் பத்தி பார்க்க)



"வேதம் என்பது வேறெதுமில்லை தலைவன் கூறிய உபதேசம்; விண்ணில் இருப்பது சொர்க்கமுமல்ல அதுதான் தலைவனின் மலர்ப்பாதம்"
("நவரத்னம்" படத்தில் மக்கள் திலகத்தின் மிடுக்கான தோற்றம்.)

(7-ம் பத்தி தொடர்ச்சி)

மேலும் டி. எம். எஸ். மகன் செல்வகுமார் இசைக் கச்சேரி சமீபத்தில் அரங்கேற்றம் நடந்தது. செல்வகுமாருக்கும் எந்த இசையமைப்பாளரும் "சான்ஸ்" தரவில்லை. இது விஷயத்திலும் ஏமாற்றம். பத்திரிகைகளில் பேட்டி என்ற பெயரில் உளறி வருகிறார். ஆனால் அவர் ஒரு திறமைமிக்க பாடகர்.

கே: வாழ்வு, சாவு இரண்டும் ஒன்று என்கிறேன். அதுசரியா?

ப: வாழ்க்கை என்னும் ஆராய்ச்சியின் முடிவான பலன் சாவு. பயிற்சி பலன இரண்டும் வேறு வேறு.

கதிரேசன், தூத்துக்குடி.

கே: கருணாநிதியின் குடும்பப் பத்திரிகையில் கணேசனின் சினிமா செய்தியை வெளியிடுகிறார்களே!

ப: கணேசனுக்கும் கருணாநிதிக்கும் "அந்தரங்க" உறவு இன்னமும் நீடிக்கிறது என்பதன் அர்த்தமிது.

கே: ம. பொ. சி. கட்சி மாறிவிட்டாரா?

ப: இந்தத் தள்ளாத வயதில் அவர் வெளியில் நடமாடுவது உமக்குப் பிடிக்கவில்லையா!


எழில்வேந்தன் எம்.ஜி.ஆர்

(மாதமிருமுறை)

**சந்தா விகிதம்**

1 ஆண்டுக்கு (மலர் உட்பட) ரூ. 12-00
6 மாத சந்தா ரூ. 6-00

இதற்கு குறைந்த சந்தா இல்லை. சந்தா தொகை டிராப்ட் அல்லது மணியார்டர்மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும்.

எழில்வேந்தன் எம். ஜி. ஆர்.
60. சீனிவாச பெருமாள் சன்னதி தெரு, சென்னை-14.



(6-ம் பத்தி தொடர்ச்சி)

தயாரிப்பாளர்,)

ஸ்ரீராம், மோகன, "குடிகாரன்" துரை ஆகியோரும் நன்றாக நடித்தனர். (சினிமாவில் குடிக்கும் காட்சிக்குத் தடை விதித்திருக்கிறார்கள். நாடகத்துக்கு இல்லையோ?)

மொத்தத்தில் புரட்சியும் புதுமையும் மிகுந்த "மருமகள் வந்தாள்" நாடகத்துக்கு பொதுமக்கள் வரவேற்பு நிச்சயம் இருக்கும. ஆனாலும் நாடகத்துக்கு அரசு உதவி செய்ய வேண்டும் என்பது நமது கோரிக்கை!


## விரைவில் வெளிவருகிறது!





30 பைசா விலையுள்ள 100 புத்தகங்களின் விலை 15 ரூபாய்தான்.
முன்பணம் செலுத்திப் பெற்றுக்கொள்க.
தி மணி புக் ஹவுஸ், 60 சீனிவாச பெருமாள் சன்னதி தெரு, இராயப்பேட்டை சென்னை-600014.


## [நாடக விமர்சனம்] மருமகள் வந்தாள்

பிரபல இயக்குனரும் வசன கர்த்தாவுமான ப. நீலகண்டன் கதைவசனமெழுதிய "மருமகள் வந்தாள்" வரதட்சணை பிரச்னையால் ஏற்படும் கொடுமைகளை அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டும் சமூக சீர்திருத்த நாடகம் என்றாலும் முழுக்க பிரச்சார அறுவையாக (சோ நாடகத்தைப் போல) அமையாமல் வயிறு குலுங்க சிரிக்க வைத்து சிந்திக்க வைக்கும் புதுமை நாடகமாக அமைந்துவிட்டதற்கு பாராட்டுகிறோம்.

விபச்சாரிகள் பெருகுவதற்கு வரதட்சணை கொடுமைதான் மூலகாரணம். எனவே விபச்சாரிகளை ஒழிக்க வேண்டுமானால் முதலில் வரதட்சணையை ஒழிக்க வேண்டும் என்ற நாடகத்தின் மூலக்கருத்தை அரசினரும் பொதுமக்களும் அவசியம் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும்.

மிகவும் நாணயமான 'தந்தை'

ஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃ

○ தமிழக ஆளுநர் சுகாதியா ஆளுநராகப் பதவியேற்ற பின் முதன் முதலாகப் பார்த்த நாடகம் "மருமகள் வந்தாள்". இந்த நாடகத்தை முழுவதும் பார்த்த புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர் நாடகம் முடிந்ததும் மேடைக்குச் சென்று நடித்த கலைஞர்கள் அனைவரையும் பாராட்டி நிறை குறைகளை விமர்சித்தார். இந்த நாடகத்தை டைரக்ட் செய்த நடிகை சந்திரகாந்தா நாடகத்தில் நடிக்கவில்லை.

ஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃ

களையும் இந்த வரதட்சணை திருடனாக மாற்றிவிடுகிறது என்பதை நினைக்கும்போது உடல் புல்லரிக்கிறது.

சமீபகாலமாக சென்னைசபாக்களில் நடந்து வரும் வெத்துவேட்டு நகைச்சுவை நாடகங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருப்பது புதுமைதான். நடிப்பில் முதலிடத்தைப் பெறுவது "என்னத்தே" கன்னையாதான். அவர் வரும் அத்தனை கட்டங்களிலும் சிரித்து சிரித்து வயிறு புண்ணாகிவிடுகிறது. அடங்காப்பிடாரி மனைவிக்கு அடங்கி ஒடுங்கி நடிக்கும் பாணி பிரமாதம். அவர் கால்களைப் பின்னிப் பின்னி ஓடும் விதம், வசன உச்சரிப்பு அத்தனையும் அனுபவ முத்திரையைப் பிரதிபலிக்கிறது. வயது முகிர்ந்தவரை திருமணம் செய்து உணர்ச்சிகளை அடக்க முடியாமல் அழுது புலம்பித் தவிக்கும் இளம் மனைவியாக வரும் வி. கே. பத்மினி முன்னுக்கு வரக்கூடியவர்.

பொதுவாக நாடகங்களில் யாராவது அழுதால் ரசிகர்கள் கேலி செய்வது வழக்கம். ஆனால் பத்மினி அழும் கட்டங்களில் அத்தனைபேர் உள்ளங்களும் அழுதன என்றால் மிகையாகாது.

"எழுத்து வேறு செயல் வேறு' என்றில்லாமல் லட்சியத்தையே வாழ்க்கையாகக் கொண்ட பத்திரிகை நிருபராக வரும் ஏ. வீரப்பன் பலே! பலே! பத்திரிகை நிருபரை குணசித்திர வேடமாக சித்தரித்த ப. நீலகண்டனுக்கு நன்றி. (பத்திரிகை நிருபர்களை கேலியாக இதுவரை சித்தரித்து வந்த சினிமா, நாடக ஆசிரியர்கள் இனிமேலாவது திருந்தட்டும்.)

பி. ஆர். வரலட்சுமி கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோல வசனம் பேசினார். தேவிவிஜயா வசனங்களை மறந்துவிட்டார். ஸ்ரீலலிதா வேடம் எடுபடவில்லை. தாம்பரம் லலிதா குறை வைக்கவில்லை. (ஐந்து பெண்கள் நடித்து சென்னையில் நடைபெறும் முதல் நாடகம் இதுதான். இரண்டு நாயகிகளுக்கு மேல் நாடகத்தில் நடிப்பதில்லை. ஏனென்றால் நாயகிகளுக்கு சம்பளம் கொடுத்து கட்டுபடியாகாது என்கிறார் மற்றொரு நாடகத்

(2-ம் பத்தி பார்க்க)

அணில் அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடுபவர், ஆசிரியர்: புவி. வேந்தன் (ஜெயவேந்தன்) 60, சீனுவாச பெருமாள் சன்னதி தெரு, இராயப்பேட்டை சென்னை-14.


தகதகலமாக விற்பனையாகிறது
குழந்தைகள் மாதமிருமுறை இதழ்



மனதை மயக்கும் மாயாஜாலக்கதைகள் வேடிக்கை விநோதங்கள் நிறைந்த
அணில்
அதிக பக்கங்கள் விலை 25காசு
ஆசிரியர்: புவிவேந்தன்
ஏராளமான பரிசுகளும் புதிர் போட்டிகளும் உண்டு!
முன் பணம் கட்டும் ஏஜன்டுகள் எழுதவும்
அணில். 60,சீனிவாச பெருமாள் சன்னதி தெரு, சென்னை-14